பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 12 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டன.
2. ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.
3. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆறாம் தேதி தொடங்கும் என பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.
4. ராஜஸ்தான் மாநிலம் **Bhankrota** பகுதியில் எரிவாயு டேங்கர் தீப்பற்றி நேரிட்ட விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.
5. ஆசிய ரோல்பால் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா பட்டம் வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டதால் அவை மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா அறிவித்தார்.

முன்னதாக உறுப்பினர்களின் அமளிக்கிடையே ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்களை நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிசீலனைக்கு அனுப்பி வைப்பதற்கான தீர்மானத்தை சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெஹ்வால் கொண்டு வந்தார்.

அதன்படி இரண்டு மசோதாக்களும் கூட்டுக்குழு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன.

இந்த கூட்டுக்குழுவில் மக்களவையிலிருந்து 27 உறுப்பினர்களும், மாநிலங்களையிலிருந்து 12 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரின் கடைசி வாரத்தின் முதல் நாளன்று கூட்டுக்குழு அறிக்கையை சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25-ஆம் தேதி தொடங்கிய இந்த கூட்டத்தொடரில் அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75-வது ஆண்டை குறிக்கும் வகையில் சிறப்பு விவாதம் நடைபெற்றது.

மாநிலங்களவை யிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளி காரணமாக முதலில் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது

பின்னர் அவை கூடியபோது ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான மசோதா-க்களை நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்புவதற்கான தீர்மானத்தை சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் தாக்கல் செய்தார்.

இதையடுத்து மாநிலங்களவை நடவடிக்கைகள் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்பர் அறிவித்தார்.

[]<<<>>>[]

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரை காங்கிரஸ் கட்சி அவமதிப்பதாகக். கூறி பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள அம்பேத்கர் சிலை அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பிஜேபி மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே அம்பேத்கர் குறித்த மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தில்லி விஜய் சவுக் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, பொதுக்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

மத்திய துணை ராணுவப்படையான சகஸ்த்திர சீமா பால்-யின் நிறுவன தினத்தையொட்டி நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த இப்படையைச் சேர்ந்த வீரர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று மரியாதை செலுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தேச பாதுகாப்பு மற்றும் மக்கள் சேவையில் இந்த படைப்பிரிவினரின் தியாகம் மற்றும் வீரம் பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

எல்லைப் பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத ஊடுறுவலை தடுக்கும் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள வீரர்களின் துணிச்சல் போற்றத்தக்கது என்றும் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் மாநிலம் **Bhankrota** பகுதியில் எரிவாயு டேங்கர் லாரி வெடித்து நேரிட்ட தீ விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.,

இச்சம்பவத்தில் காயமடைந்து ஜெய்ப்பூரில் உள்ள மருத்துவமனையில் சகிச்சை பெற்று வருபவர்களை அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா நேரில் சந்தித்து நலன் விசாரித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்றார்.

இதனிடையே மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, ராஜஸ்தான் முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

**[]<<<>>>[]**

இந்திய மீனவர்கள் ஆயிரத்து 51 பேர் கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.,

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், இலங்கை படையினரால் மொத்தம் 276 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேபோன்று பாகிஸ்தான், பங்ளாதேஷ், சௌதி அரேபியா, பஹ்ரைன், கத்தார் படைகளாலும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஆப்ரிக்கா நாடான லெசோத்தோ-விற்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை அனுப்பி வைத்துள்ளது.

இந்த உதவி அந்நாட்டின் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய உதவும் என்று வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் நவசேவா துறைமுகத்திலிருந்து அரிசியை ஏற்றிய கப்பல் லெசோத்தோவிற்கு இன்று புறப்பட்டுச் சென்றதாக அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

ஈரோடு மாவட்டத்தில் தொள்ளாயிரத்து 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சோலார் எனும் இடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 131 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பிலான 222 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய அவர், 284 கோடி ரூபாய் செலவில் சுமார் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் ஈரோட்டில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடம் கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள கூட்டு குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட அறிவிப்புகளையும் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -44--- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆறாம் தேதி தொடங்கும் என பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது வரும் ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் ஆளுநர் உரையுடன் தொடங்குவதாகக் கூறினார்.

அவையின் அலுவல் ஆய்வுக்குழுக் கூடி, எத்தனை நாட்களுக்கு இந்த கூட்டத்தொடர் நடைபெறும் என்று முடிவு செய்யும் என்று திரு அப்பாவு தெரிவித்தார்.

[]<<<>>>[]

நேரு யுவகேந்திரா மை பாரத் சார்பில் நாடு முழுவதும் மாவட்ட அளவிலான இளையோர் திருவிழா நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக திருப்பூரில் நடைபெற்ற விழிப்புணர்வு போட்டியில் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

இந்த போட்டிகள் தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

இந்தியா – அமெரிக்கா இடையேயான ராணுவ ஒத்துழைப்பு மேலும் வலுப்பெற்று வருவதாக அந்நாட்டு ராணுவ தலைமையகமான பெண்டகன் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களை சந்தித்த இந்தோ – பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகத்தின் உதவி செயலாளர் திரு **Ely ratner** ராணுவ நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இருதரப்பு ஒத்துழைப்பு வேகமடைந்து வருவதாகக் கூறினார்.

அமெரிக்காவில் திரு ஜோ பைடன் ஆட்சி நிறைவடைந்து புதிய அதிபராக திரு டொனால்டு ட்டிரம்ப் பதவியேற்க உள்ள நிலையில், அந்நாட்டின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**[]<<<>>>[]**

ஆசிய ரோல்பால் சாம்பியன் போட்டியின் இந்தியா பட்டம் வென்றது.

கோவாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியா 11-4 என்ற கோல் கணக்கில் ஈரானை வென்றது.

***End of News***